கடந்த 30–12–2017 அன்று மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் துறைமுக திட்ட ஆய்வுப் பணிகள் தொடர்பாக கீழமணக்குடி கிராமத்திற்குச் சென்றபோது, மீனவர்கள் சுமார் 500 பேர் அவர்களை முற்றுகையிட்டு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து, காவல் துறையினர் தலையீட்டின் பேரில் கலைந்தனர்.

வர்த்தகத் துறைமுகம் அமைவதற்கு ஆதரவு தெரிவிக்கும் பொதுமக்கள் சுமார் 2,400 பேர், 31–12–2017 அன்று துறைமுகத்தை அப்பகுதியில் அமைக்கக் கோரி முகிலன் குடியிருப்பில் ஆர்ப்பாட்டம் செய்தனர். தமிழ்நாட்டின் பொருளாதார ரீதியான முன்னேற்றத்திற்கு இந்த வர்த்தகத் துறைமுகம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் இதனால் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிந்து அதனைக் களைவதற்கும், திரு. விஷ்ணு, இ.ஆ.ப., என்ற அதிகாரியை சிறப்புப் பணி அலுவலராக நியமித்து உத்தரவிடப்பட்டு இருக்கிறது. அங்குள்ள அனைத்துத் தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கனிவுடன் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) துறையூர் தொகுதி, நாகலாபுரம் கிராமம், மாற்றுத் திறனாளி மாணவருக்கு அரசின் உதவித் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, நாகலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த காமராஜ்–செல்வி ஆகியோரின் மகன் மணிகண்டன் என்பவர் 9–வது வகுப்பு பயிலும் மாணவர் ஆவார். இவர் பிறவியிலிருந்தே காது கேளாமை, வாய் பேசாமை குறைபாடுள்ள மாற்றுத்திறனாளி. இவர் ஜார்கண்ட் மாநிலம், ராஞ்சியில் நடந்த தேசிய காது கேளாதோர் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு, 100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்திலும், உயரம் தாண்டுதல் போட்டியிலும் பங்கேற்று தங்கப் பதக்கமும், தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கமும் பெற்றார். இவர் உலக காது கேளாதோர் ஒலிம்பிக்

2018 ஜனவரி 11] [திரு. செ. ஸ்டாலின் குமார்]

போட்டியில் இந்தியாவின் சார்பில் பங்கேற்க உள்ளார். இந்த ஏழை கிராமப்புற மாற்றுத் திறனாளி மாணவரான மணிகண்டனை ஊக்கப்படுத்தும்வகையில், மேலும் பல பரிசுகளை பெறுவதற்கு, தமிழக அரசின் சார்பில் சிறப்புப் பயிற்சியும், அரசின் உதவித் தொகை வழங்கவும் வேண்டி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மாவின் கனவை நனவாக்க ஆட்சி செய்து கொண்டிருக்கும் மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் முக்கியத்துவம் இல்லாதிருந்த விளையாட்டுத் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, இந்தியாவிலேயே முதன் முறையாக விளையாட்டுக்கு என ஒரு தனி பல்கலைக்கழகம் அமைத்து மாணவர்களையும், இளைஞர்களையும் ஊக்குவித்து தேசிய, ஆசிய மற்றும் உலக அளவிலான போட்டிகளில் பங்கு பெறுவதற்கு பல்வேறு வகையான சலுகைகள் ஊக்கத் தொகையை வழங்கியும், மேற்படி போட்டிகளில் பரிசு வென்று வருபவர்களுக்கு ஏற்கெனவே வழங்கிய பரிசுத் தொகையை இரு மடங்காக உயர்த்தி அளித்தும் விளையாட்டுத் துறையை ஊக்குவித்து வந்தார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில், ஐந்து ஆண்டுகளில் மொத்த நிதியொதுக்கீடு சுமார் 139 கோடி ரூபாய். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மொத்த நிதியொதுக்கீடு ரூ.554.00 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி)

2011 வரை 13 விளையாட்டு விடுதிகளில் 860 மாணவர்கள் இருந்தனர். தற்போது 29 விடுதிகளாக உயர்த்தி 2,060 மாணவர்கள் தங்கி பயிற்சி பெற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துறையூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அவரது தொகுதியைச் சார்ந்த மணிகண்டன் என்னும் மாணவர் சர்வதேச காது கேளாதோர் தடகள விளையாட்டுப் போட்டியில் பங்குபெற நிதி உதவியும், உபகரணங்களும் வழங்கக் கோரியுள்ளார்.

அரசு விதிமுறைகளின்படி, சர்வதேச அளவிலான அங்கீகாரம் பெற்ற போட்டிகளில் கலந்துகொள்ள வெளிநாடுகளுக்குச் சென்று வர விமான கட்டணமாக ரூ.30,000 வழங்கப்படும். அவர் போட்டியில் கலந்து கொண்டு, உரிய ஆவணங்களை அரசுக்கு வழங்கிய பிறகு நிதியுதவி வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர் பயிற்சி பெற திருச்சியில் உள்ள அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்குச் சென்றால் உரிய பயிற்சியும், தேவையான உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

'தமிழ்நாடு' பொன்விழா ஆண்டு கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை படிக்கின்றார், அதனைக் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை படிக்கின்றார்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் வரலாறும், தமிழ் மக்களின்